

முரசொலி
பொங்கல் சிறப்பிதழ்
14—1—86 இதழுடன் இணைப்பு
14/1/86

# இன உணர்வு கொள்!

—பேராசிரியர்—



சோவியத் ருஷ்ய நாட்டின் புரட்சிக் கவிஞர் (பாரதி தாசன்) ரசூல் கம்சதோவ். அவன், மலைவாழ் மக்களாகிய அவார் இனத்தவன். தனி எழுத்து வடிவம் கூடப் பெருத, இலக்கியச் செல்வம் பெருத, சில லட்சம் மக்கள் பேசி வழங்கும் மொழி - அவர் தம் 'அவார்' மொழி. அந்த மொழியில், நாட்டுப்பாடல்கள் பாடும் கவிவாணர் பரம்பரையில், தோன்றியதொரு கவிஞனே ரசூல். அவன் பாடிய கவிதைக் கரு மிகுந்த பாடல்கள், ருஷ்ய மொழியில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு, உலகெங்கும் வரவேற்கப்படும் தகுதி பெற்றுள்ளது.

மலைவாழ் இனத்து 'ரசூலின்' புகழ்—இன்று பல்கலைக் கழக மண்டபங்களில் எதிரொலிக்கிறது. அவனது சிந்தனைச் சிதறல்கள் புரட்சிக் கனலாகப் பரவுகிறது. ஆம், புரட்சிக் கருத்துக்கள் என்று நாம் சுட்டும் அந்தச் சிந்தனைகள் மாந்தனின் இயற்கை உணர்வை- நாகரீகத்தின் பசப்புகளுக்கு இடமின்றி வெளியிடுவதாகத் தான் உள்ளது. இயற்கை உணர்வை இழந்துவிட்டு, இனத்தைமறந்து, மொழிப் பற்றின் உயர்வை உணராது அடிமை உணர்வை இயல்பாக்கிக் கொண்ட நம்மை ஒத்தவர்களுக்குத் தான் அவை, புரட்சிக்கனல் போலும் என் சொல்ல, நம் நிலையை, நம்மவர் மனப்பான்மையை! ரசூல் பாடிய பல கவிதைகள் தீங்கனிகள், பல துண்டுக் கவிதை வரிகள் தேன் துளிகள்! மறத்துப்போன உடலுக்கும் உயிருக்கும் நன் மருந்து!

இன உணர்வை இயல்பாக எடுத்துக்காட்டி இடியேறு என முழங்கும் ரசூல் - வாழ்ந்த்தும் - போற்றியதும் பொதுவுடைமை பூமி; சோவியத்து ருஷ்யா. அப்படிப்பட்ட பொது நிலை அறம் கண்ட மண்ணிலும் - இன உணர்வுக்கு இடமிருக்கிறது, தேவை இருக்கிறது, அந்த மக்களின் வாழ்விற்கு ஆர்வமூட்டுகிறது என்றால், இந்த தேசிய அரிப்புமிக்க மண்ணில் அந்த உணர்வுகள் எவ்வளவு இயல்பு தேவை என்பதை எல்லோரும் எண்ணிப்பார்த்திட, இந்தப் பொங்கல் நாளை, தமிழினத்தின் தனித் திருநாள் ஏற்றதொரு நாளன்றோ!

எனவே தான், ரசூல் வழங்கிய கவிதையில் ஒன்றைப் பொங்கல் திருநாள் வாழ்த்துரைக்கும் உள்ளத்துடன், விருந்தாக்கிட முனைந்தேன்.

மூலக் கவிதையின் கருத்தை, கவிதை வடிவ அழகுடன் வடித்திட இயலாத நான், அந்தக் கவிதை உணர்த்தும் உண்மையை ஒருவாறு வரைந்துள்ளேன். படித்து மகிழ இயலாவிடினும் சிந்தித்து ஏற்றிட விரும்புகிறேன்.

ரசூல் கம்சதோவின் கவிதைக் கருத்து இது:

"மருத்துவர் காணாத மருந்து!"

கனவொன்று கண்டேன். நேற்றிரவு;
உறக்க நிம்மதியைக் குலைப்பதுதானே கனவு!
நான் இறந்துபட்டேன்.
அறுத்தோடிய ஆழப்பள்ளம்; அதில்
நான் கிடந்தேன், யாருங்காணாமல்!
என் பக்கவிலே ஒரு துப்பாக்கித் தோட்டா!

பயனின்றியே காத்துக் கிடக்கிறேன்;
பக்கத்தில் முழங்கி இறங்குகிறது மலை நீரோடை
புழுதி கிளம்பும் தரை மீது நான்,
புழுதி மண் ஆவதற்குத் தயாராக!

அறிந்தவர் யாருமில்லை; நான் இங்குச் சாவதை!
வானத்தில் வட்டமிடும் பருந்துகள்!
நிலத்தினில் அஞ்சி ஓடும் ஒன்றிரண்டு மான்கள்!
இவையன்றி வேறில்லை, என் பார்வையில் பட்டவை!

அகால மரணம் என்னை நெருங்கும் வேளை!
துயரத்தில் அழுவதற்கோ, கூடி அரற்றவோ
எனை ஈன்ற தாயோ, துணைவியோ தோழரோ,
யாருமில்லை; ஒப்பாரி வைத்திடும் ஊரவரும்
வரவில்லை.

எவரும் காணாமலே; கண்ணீர் சிந்த யாருமின்றி
இறுதி மூச்சு விட்டு நான் ஓய்ந்திடும் வேளை!
ஒற்றையடிப் பாதையில் கடக்கும் இருவர்
தொலைவில் உரையாடிய என் தாய்மொழி
ஒலி என் செவி புகுந்தது.

பிறர் பார்வை படாத ஆழப் பள்ளத்தில்
வேதனையில் துடித்துக்கிடந்தேன் நான்!
அவர்களோ ஒரு ஹாசனின் வஞ்சகத்தை
அலியின் சூழ்ச்சியை விவரித்து நகையாடினர்.

என் அவார் மொழிப்பேச்சு செவிபுகுந்தது,
குற்றுயிராய்க் கிடந்த என் உடம்பில்
புத்துயிர் பிறந்தது;
இப்படிப்பட்ட சிகிச்சை முறை மருத்துவர்
எவரும் காணாதது,
நாட்டு மருத்துவரும் அறியாதது.

பிறமொழி மாந்தரை அவரவர் தாய்மொழி
அதனதன் இயல்பினில் காக்கட்டும்! ஆயினும்
என் அவார் மொழி நாளை இறந்துபடும் எனில்
என் உயிருக்கு இன்றே முடிவு அமையட்டும்!

நாட்டின் உயர்நிலை ஆட்சிப் பீடத்தில்
என்மொழி இடம்பெறவில்லை என்பது பெரிதல்ல;
ஆனால் எனதுள்ளம் விழையும் மொழி அவார்!
அதுவே என் உயிரினும் சிறந்தமொழி எனக்கு!

என்வழிவரும் தலைமுறையினர் பயின்றிட
மகமுதுவின் மொழிபெயர்ப்பே வாய்க்கட்டும்!
'அவார்' மொழியில் பிறர் புரிந்து கொள்ள எழுதும்
கவிஞருள் இறுதியாவோன் நான் தானோ?
நான் பெற்ற வையக் வாழ்வு எனக் கின்பம்!
விரிந்த பரவை முற்றும் ஆர்வமுடன்
நோக்கு பவன் நான்!
எனினும் சோவியத்தின் மீதே என்க்குத்
தணியாத பற்று
அதனையும் என் அவார் மொழியில் தான்
பாடுவேன் மகிழ்ந்து!

கிழக்கிலும் மேற்கிலும் விரிந்து கிடக்கும்
இந்தச்சுதந்திர நாட்டுக்கு என் உயிரும் தருவேன்!
ஆனால் என்னுயிர் பிரிவது அவார்
மண்ணில் நிகழட்டும்
அதுவே அவார் மண்ணில் என் கல்லறையில்
உறங்கச் செய்வதன்றோ!

'ரசூல்'- ஓ இவன் ஓர் 'அவார்' கவிஞன்!
'அவார்' கவிஞன் ஒருவனின் வழித்தோன்றல் என்றே!
அங்கு கூடும் அவார் மக்கள் பேசும் உரையும்
'அவார்' மொழியிலேயே எந்நாளும் ஒலிக்கட்டும்!
அந்த 'அவார்' ஒலியே எனக்கு உறக்கத்திற்குத்
தாலாட்டாகட்டும்.

ஆம்! ரசூல் கம்சதோவ் பாடிய வரிகள் - உங்களுக்குத் தமிழ்த் திருநாள் வாழ்த்துமொழி ஆகின்றதன்றோ!




வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உளப்பூர்வமான
பொங்கல் வாழ்த்துக்கள்!


சோமு லாட்ஜ்
யூனியன் ஹைஸ்கூல் ரோடு,
கோயம்புத்தூர் - 641001
தொலைபேசி: 31531 (5 லைன்கள்)



HAPPY PONGAL TO ALL...
SANGEETHA ENTERPRISES
9, Venkataswamy Naidu Industrial Area
Bharathi Colony, peelamedu,
Coimbatore 641004
Phone; PP 30852
prop: D. Selvarajan

# நிலைக்கட்டும் இந்த உணர்வு!

– நாஞ்சிலார்



"நாட்டோரே எதனைத் தேடுகிறீர்கள்? அர்த்த மற்ற வார்த்தைக் கோர் வைகளால், எழுதி அலங் கரிக்கப்பட்ட, அற்புத மான அரண்மனைக் கட்டி யெழுப்ப விரும்புகிறீர் களா?

"அல்லது வெறும் கனவு களால் பின்னிப் பிணைக் கப்பட்ட கூரைகளால் வேயப்பட்ட ஆலயங் களையா?"

"அல்லது, பொய்யர் களும், கொடுங்கோலர் களும் கட்டியெழுப்பிய வைகளைத் தூள் தூளாக் கக் கட்டளையிடுகிறீர் களா?

"எனது" விரல்களால் எத்தர்களும் கேடுகெட்ட தீயவர்களும் நட்டவை களைப் பிடுங்கி எறிந்திட வா?.

"உனது பைத்தியக் காரத்தனமான ஆசை களைப் பேசு"

"நல்லோரே, பூனைக் குட்டியைப் போல் நான் உங்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தவா?

அல்லது கர்ஜனை செய் திடும் சிங்கத்தைப் போல் என்னை நான் திருப்திப் படுத்திக் கொள்ளவா?

"உனக்காக நான் இசைத் தேன். ஆனால் நீயோ இசை யோடு இணைந்து ஆட வில்லை. அழுதேன், உனக் காக. அழவில்லை என் னோடு.

"ஏக நேரத்தில் பாடவும் வேண்டுமா? அழவும் வேண்டுமா."

"இரவின் ஆழ்ந்த அமை தியில் அழைத்தேன் உன்னை.".

ஒளிசிந்தும் நிலவின் அற் புதத்தை, கண் சிமிட்டும் தாரகைக் கூட்டங்களைச் சுட்டிக் காட்ட"

"உறக்கத்திலிருந்து துள்ளியெழுந்தார். நடுங் குகின்ற கரங்களோடு

(4-ம் பக்கம் பார்க்க)

**WITH BEST COMPLIMENTS FROM:**

**GOLD SPOT**

**LIMCA**

**THUMS UP**

**PHONE: 420755**

**420440**

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உனது வாட்களைப் பற்றிக் கொண்டு, எங்கே எதிரி அவனைத் தீர்த்துக் கட்டுவோம் என்றாய்”

வைகறைப் பொழுதில் எதிரிகள் வந்த நேரத்தில் அழைத்தேன், உன்னை. விழித்திடவில்லை நீ. ஏனென்றால் “அச்சம்” என்ற விலங்குகள் உன் கரங்களைக் கவ்விக்கொண்டன. செங்கோல்கள் என்ற பேரணியில் நீ மல்லிட்டுக் கொண்டிருந்தாய் கனவில்!

“பாரின் பேரழகைப் பார்க்க மலை உச்சிக்கு ஏறுவோம் என்றேன்.

“இந்தப் பள்ளத்தாக்கின் அடிவயிற்றிலேதான் எனது தந்தையர்கள் வாழ்ந்தார்கள! மாண்டார்கள் அதன் நிழலில்! புதைக்கப்பட்டார்கள், அங்குள்ள குகைகளில்!’

எப்படி அவர்களை மதிக்காதவரின் சொல்கேட்டு நாங்கள் இடம் பெயர முடியும் என்று கேட்டாய்!

“சமவெளிக்குச் செல்வோம், அது திரைகடலுக்கு அளித்த திரவியத்தைக் காண என்றேன்!”

“பள்ளத்தின் பேரிரைச்சல் எங்களது உணர்வுகளை நடுங்கச் செய்யும், ஆழத்தின் அச்சுறுத்தல் எங்களது உடல்களை உறைய வைக்கும் என்றாய், கோழைத்தனத்தின் குன்றில் நின்று கொண்டே!

‘எத்துவேலை, ஏமாற்றல் உனது வழிபாடு.

“திருட்டுத்தனம் உனது வாழ்க்கை நெறி. சூன்யம், உனது கோட்பாடு. ஏன் இன்னும் நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய்?

“மானுடம் ஒரு பிரகாசமான நீரோடை! பாட்டிசைத்துக் கொண்டுசெல்லும் போது மலைமகளின் இரகசியங்களை இதயக் கடலுக்குச் சுமந்துசெல்லுகிறது.”

“ஆனால் எனது நாட்டவனே, தேங்கி விட்ட குட்டை, நீ—புழு பூச்சிகளின் உறையுள்,”

மேலே ஓடிக் கொண்டிருக்கின்ற உரை நடைக் கவிதைப் புனல், வாழ்வின் வசந்தகாலத்தில், காலத்தை வென்ற கவியரசன், புதுக் கவிதைத்துடிப்பின் கதாநாயகன், தத்துவப் புலவன்.

கலீல்கிப்ரான் (KAHLIL GIBRAN) உலகிற்குப் பெருக்கெடுத்தோடவிட்ட ஒன்று.

வாழ்வின் மாலை நேரம் வரை அவன் காத்திருக்க விரும்பவில்லை! வசந்தத்திலேயே விடை பெற்றுக் கொண்டான்!

விரக்தியும், வெறுப்பும், எள்ளி நகையாடலும், ஏமாந்தவர்களுக்காக அவன் எழுப்பும் அழு குரலும் நம்மை மெய்மறக்கச் செய்கின்றன!

சிந்தனையற்ற, சொரணையற்ற, மந்தைக் கூட்டங்களின், மமதையின் நடுவே மன அமைதி காண விழையும் போக்கைச் சாடினான்!

வீரம் பேசிவிட்டு, விளைவிக்க வேண்டிய நேரத்தில் சோரம் போகும் வீணர்களுக்காக விழிநீர் பாய்ச்சினான்!

பாய வேண்டிய நேரத்தில், பழம் பெருமை பேசியும், பெருங்கதைகள் கூறியும் சோம்பிக் கிடக்கும் சிரத்தையற்றவர்களை எண்ணி சித்தம் கலங்கினான்!

இருப்பதிலே இன்பம் காணும் இயலாச் சோம்பேறிகள், சமூகத்தின் சாபக்கேடுஎனக் கொட்டி முழக்கினான்!

தளர்ந்து விட்ட நரம்புகளின் துணையோடு, உலர்ந்துவிட்ட உத்வேகமான உணர்வுகளின் “சாவு” என்னும் தண்டூன்றி நடைப்பிணங்களாக வீறுகொள்ள வேண்டிய சமுதாயத்தின் குடிமகன் உலவுவதைக் கண்டு கொதித்தான்!

கற்பனையில் கோட்டைக் கட்டி, கொத்தளம்சமைத்து கருமத்துக்குரியவன் நான், எனத் தன்னையே ஏமாற்றிக் கொள்ளும் அட்டைக் கத்தி வீரருக்காக அழுதான்-ஆவேசப்பட்டான்.

கலீலின் கவசம், எஃகாலானது! கரமேந்தியவாள், உருக்காலானது!

பொங்கல் புதுநாளில் தமிழக மக்களின் இரத்த நாளங்களை கலீலின் கவிதைக்கரு உருக்காக மாற்றட்டும்.

புத்தாண்டில், அலைமோதுகின்ற எண்ணங்களில்மிதந்துவரும்உணர்ச்சி ஓடங்கள், அவைகளில் பயணம் மேற்கொண்டு கரை சேரத் துடிப்பவர்களைப் பார்க்கிறேன்.

ஆமாம், கலீல் என்னைக் கண்ணீர் சிந்த வைத்தான்.

ஆனால் பாலஸ்தீனப் புலவன் மாமூட் டார்விஷ் (MAHMOUD DARWISH) என் கண்களைக் கனல் பொறி சிந்திடவைத்தான், அகதிகளாக, அபலைகளாக, அனைத்தையும் இழந்து விட்ட நிலையிலும் நம்பிக்கை தளராதவர்களாக வாழ்வை நகர்த்திடும் மககளின் மன உணர்வுகளை படம்பிடித்துக் காட்டுகிறான். கீழே தருகிறேன்; பிறக்கின்ற பொங்கல் வழிகாட்டட்டும் என்பதற்காக;

“We will come out of our Camps
We will come out of our exile
We will come out of our shelters
We will have no more shame, If the enemy insults us.
We will blush no more
We know how to manage our arms
And we know the art of un armed self defence
We also know how to build
A modern factory
a house
a hospital
a school
a bomb
a missile
and we Know how to write the most beautiful poems.

நிலைக்கட்டும் இந்த உணர்வு!


அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

தந்தி: COTTON
Komarapalayam

டெலக்ஸ்: 0856-244

டெலிபோன்கள்:
ஆபீஸ்: 79621 (ஈரோடு எக்ஸ்)
ஆபீஸ்: 216 (பவானி எக்ஸ்)
தனி: 612 ,,
வீடு: 310 ,,

சுந்தரம் நூற்பு ஆலை
பிரைவேட் லிமிடெட்

தபால் பெட்டி எண்: 25
சேலம் மெயின் வீதி,
குமாரபாளையம் - 638183

மேனேஜிங் டைரக்டர்கள்:
ஜே. கே. கே. சுந்தரம்
ஜே. கே. எஸ். மாணிக்கம்



## தமிழிசைக்கு அன்று இருந்த எதிர்ப்பு!

★

நான் ஈரோட்டிலே 'குடியரசு' அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, திருவையாறு தியாகராசர் திருநாளையொட்டி இசை விழாக்கள் நடைபெற்றன — வழக்கம்போல்!

விழாவில் பங்குகொண்ட இசையாளர் ஒருவர், அன்றையதினம் மேடையில் அமர்ந்ததும், தமிழிசைப் பாடல்களையே பாடி -- நிகழ்ச்சியை முடித்துவிட்டு இறங்கினார்!

அடுத்து ஒருவர் இசை நிகழ்ச்சியை நடத்த வந்தவுடன், 'இந்த மேடையைச் சுத்தம் செய்து -- புண்ணியாதானம்' நடத்தி -- 'தோஷம்' கழித்தால்தான் மேடையேறுவேன்' என்று கூறி, அந்தக் காரியங்கள் எல்லாம் நடந்த பிறகு தமது இசையைப் பொழிந்து முடித்தார்!

அதை வைத்துத்தான், 'தீட்டாயிடுத்து!' என்று தலையங்கம் எழுதினேன்.

''தமிழிசை நடத்திய மேடையைத் தோஷம் கழித்த காரியம் நடக்கிறது; தமிழர்கள்தான் வாழ்கிறார்களா'' என்று எழுதி முடித்தேன்!

அந்த அளவுக்கு எதிர்ப்புகளைத் தாங்க வேண்டியிருந்தது!

—கலைஞர்




ஆதரவாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும்
எங்களின் பொங்கல் தின
**நல் வாழ்த்துக்கள்!**

போன்: 31470 (10 Lines PMBX)
தந்தி : "கிருத்திகை"

# ஹோட்டல் ஸ்ரீமுருகன்

தவே அண்டு கோ, சந்து,
கோயம்புத்தூர்—641018

சிங்கிள்,டீலக்ஸ், A / C.- Non A / C அறைகள்!
சூடான மற்றும் குளிர்ந்த தண்ணீர்—சேனல் மியூசிக்
போன்—கார்பார்க்கிங்—மினி கான்ப்ரன்ஸ் ஹால்,
வெஜிடேரியன் ரெஸ்டாரன்ட் மற்றும் டிராவல் ஏஜென்சி.



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல்தின நல்வாழ்த்துக்கள்

ஸ்டீல் பீரோ மிக்ஸி டிரான்ஸிஸ்டர் பேன் டி. வி,


# கீதா & கம்பெனி

தொலைபேசி
P. P. 32470

**ஸ்ரீராம் பிரசாத் காம்ப்ளெக்ஸ்**




தி. குப்பகோணம் சிட்டி யூனியன் பேங்க் கீழ்தளம்



டி. வி., ரேடியோ, பேன், டிரான்ஸிஸ்டர் ஸ்டீல் பர்னிச்சர்ஸ், மிக்ஸி, விற்பனையாளர்கள்

811. பாரதியார் ரோடு,
பாப்பநாயக்கன்பாளையம், கோவை 641037

ரொக்கத்திற்கும் சுலபதவணைக்கும் வாங்க சிறந்த இடம்


கீதா & கம்பெனி




*With the Best Compliments of*

# SOUTHERN ENGINEERING INDUSTRIALS

Manufacturers of
**" SEI "**



ELECTRIC MOTORS MONO BLOCS & PUMPS
Phones: Office : 32165, 32265 Factory: 22165
Telegram : SEIMOPUM





**'LAKSHMI BUILDINGS'**
**No. 442, Puliakulam Road,**
**Pappanaicken Palayam P.O.**
**COIMBATORE-641037.**

வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்,
மற்றும் வியாபார பெருமக்களுக்கு
எமது இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்!!




லால்ஜி கோது & கம்பெனி சௌகார்பேட்டை, சென்னை-600 079.

With the Best Compliments of



SHANMUGHA THEATRE

(Lessee: S. B. DHANDAPANI)
Coimbatore: 641002

Phone: Office: 33226
Res: 33599

ரசிகப் பெருமக்களுக்கு
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

வி. பி.
பத்மநாபன்
மேனேஜிங் டைரக்டர்,
கர்னுடிக் தியேட்டர்,
பெரிய கடை வீதி, கோவை
போன்: 23295

ரசிகப் பெருமக்களுக்கு எமது
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

விஜயலெஷ்மி பிலிம்ஸ்
No: 1 நேரு தெரு
ராம் நகர்
கோயம்புத்தூர் 64109
தொலைபேசி: 33409 (அலுவலகம்)
26804 } இல்லம்
35826

பொங்கல் வாழ்த்துக்கள்!!!
புதிது புதிது புத்தம் புதிது
சுவையது சுவையது
சுவையில் மிக்கது
★
உயர்தரத்தில் உத்திரவாதமுள்ள
ஒருபாக்கட் 15பைசா
3 கப் காபி தயாரிக்க டிக்காக்ஷன் தந்துஉதவுகிறது.
வாங்கி அருந்தி மகிழ்ந்திடுவீர்!
எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பு: ஆர். டி. சாமி
சுவாமி காபி ஓர்க்ஸ்
24, 37 U. T. G. ஊன்.
இடையர் வீதி, கோவை - 1.

BEST COMPLIMENTS FROM



வாடிக்கையாளர்களுக்கு எமது
பொங்கல் தின நல் வாழ்த்துக்கள்!

தேவராஜ்
ஜுவல்லரி

தங்க ஆபரணங்கள் தயாரிப்பாளர்
மொத்தம் மற்றும் சில்லரை வியாபாரம்

தேவமணி டிராவல்ஸ்

ஷாப் நெ 9
தங்க மாளிகை பில்டிங்
589, 590 பெரிய கடைவீதி,
கோயம்புத்தூர்-641 001
தொலைபேசி: 38081

## நல்ல தமிழ் வார்த்தைகளை உருவாக்கிட வேண்டும்!

-அண்ணா



"தமிழர்களாகிய நாம் பிறமொழிகள் கலவாமல் எழுதுவது தமிழுக்குள்ள சிறப்பை உயர்த்திக் காட்டத்தான். பிற மொழிகள் கலப்பின்றி எழுதும் ஆற்றல் தமிழ் மொழிக்குத்தான் உண்டு. நம் இலக்கியங்களில் உள்ள சொற்களில் பலவற்றை இன்னமும் நாம் பயன்படுத்தாமல் இருக்கின்றோம். அவற்றை நாம் பயன்படுத்த வேண்டும். துவக்க காலத்தில் சிறிது சிரமமாக இருந்தாலும் போகப் போக சரியாகி விடும்.

உதாரணமாக— 'அபேட்சகர்' என்று சொல்லுவதை 'வேட்பாளர்' என்று கூறுகிறோம். ஒரு சமயம் நண்பர்களிடம் நான் உரையாடும் போது 'அபேட்சகர் யார்?' என்று கேட்டேன். "நான்தான் 'வேட்பாளராக நிற்கிறேன்' என்று அந்த நண்பர் பதிலளித்தார். இது போல நல்ல தமிழ் வார்த்தைகளை மெல்ல மெல்ல புகுத்த வேண்டும்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் தினவாழ்த்துக்கள்

முபாரக் பழ கமிஷன்
மண்டி

36 60 கருப்ப கவுண்டர் வீதி,
கோவை - 1

உரிமையாளர்கள்:
P. பாலச்சந்திரன்
B. அன்வர்பாட்சா
K. குப்புசாமி

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

சிவகுமார்
ஸ்டீல் ஹவுஸ்

(எவர்சில்வர் பாத்திரங்கள் மொத்த
மற்றும் சில்லரை விற்பனையாளர்கள்)

22 1 சௌடம்மன் கோவில் தெரு
கோயம்புத்தூர் - 641001

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
பொங்கல் வாழ்த்துக்கள்!

S. மௌனசாமி

-:உரிமையாளர்:-

ஏர்கண்ட்ரோல்
எக்யூப் மெண்ட்ஸ்

மகாலக்ஷிமி கோவில் தெரு
மசக்காளிபாளையம்
கோவை: 641015


போன்: 87356 தந்தி: AIRTEX

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

K. P. Lakshmi & Co.,

ராஜலட்சுமி
அரிசி ஆலை

வஞ்சிப்பாளையம் S. Ry.
கோவை மாவட்டம்.





# வாழ்வு ஒரு திருநாள் ஆகும் நாள் எந்நாள்?

— அண்ணா

எங்கு செல்கிறோம், எவ்வழி நடக்கிறோம் என்ற விளக்கம் பெற எட்டாத நிலையில், நடந்திடும்போது இந்தப் பாதை வழி சென்றிடின் இத்தனை கல் தொலைவில் சீரூர் இருக்கிறதுஎன்று எடுத்துக்காட்டும் அறிவிப்புப் பலகை தென்படின் ஓர் மகிழ்ச்சி பெறுகின்றோம்.

காரிருள்! பொருளின் வடிவும் வகையும் தெரிந்து கொண்டிட இயலவில்லை. மேடு எது, பள்ளம் எது, பாம்பு எது, பழுதை எது என்று புரிந்துகொள்ள முடியவில்லை. அந்நிலையில் ஓர் ஒளிவிளக்குத் தந்திடில் எத்துணை மகிழ்ச்சி பெறுகின்றோம்!

கோடை கொளுத்துகிறது! உச்சி வெடித்து விடுமோ என்று அஞ்சத் தக்க நிலை! வியர்வை கொட்டுகிறது!

கண்களிலே ஓர் எரிச்சல்! அந்நிலையில் பூங்காற்று வீசிடின், எத்தகைய மகிழ்ச்சி கொள்கின்றோம்!

மேலே மேலே வெள்ளம்! சுழல்! நீந்தி நீந்திக் கை கால் சோர்ந்து போய் விடுகிறது! இனி முடியாது - எல்லாம் தீர்ந்துவிட்டது என்ற நிலை! அந்தச் சமயம் ஓர் 'தெப்பக் கட்டை, கிடைத்தால் எப்படியிருக்கும் அந்த மகிழ்ச்சி!

தங்கத்தால் செய்து வைரம் இழைக்கப்பட்டதாக ஒரு தெப்பக் கட்டையைப் பிறகோர் நாள் பரிசாக அளித்தால் பெறக்கூடிய மகிழ்ச்சி, வெள்ளத்தில் மூழ்கிவிடாமல் உயிர் தப்புவதற்குப் பயன்படும் சாதாரண மரக்கட்டை கிடைத்தபோது ஏற்படும் மகிழ்ச்சியிலே பதினாயிரத்திலே ஒரு பங்கு கூட இருந்திட முடியாது.

நெஞ்சை துக்கம் துளைக்கிறது! ஓயாத தொல்லை காரணமாக மனம் உலையிட்ட துரும்பாகிறது! அந்தச் சமயத்தில், எங்கிருந்தோ குழலோசை கேட்கிறது. துயரம் கப்பிக் கொண்டிருக்கும் நிலையிலும் அந்த இசை இனிமை தருகிறதல்லவா?

வறுமைப் பிடியிலே சிக்கி, வாழ்வு பெரும் சுமை என்கிற பெருமூச்செறிந்தும், விம்மிக்கொண்டும், கண்களைக் கசக்கிக்கொண்டும், கையைப் பிசைந்து கொண்டும் உள்ள நிலையில், உள்ள மக்களுக்கு ஆண்டுக்கு ஓர் முறை கிடைத்திடும் பொங்கற்புதுநாள் எனும் விழா, அதுபோன்றதோர் மகிழ்ச்சியை, இன்பத்தை, இனிமையைத் தந்து வருகிறது.

ஆனால் ஒரு நாள் திருநாள்; மற்றைய நாட்கள் திகைப்புத் தந்திடும் நாட்கள் என்ற நிலை கப்பிக் கொண்டுள்ள மட்டும், மகிழ்ச்சி நிலையானதாக, முழு அளவினதாக, முழுப்பொருள் தருவதாக இருந்திட முடியாது.

எனவேதான், மக்களின் வாழ்வு நிம்மதி தருவதாக அமைய வேண்டும் என்று ஆன்றோர் கூறினர்.

நாட்டுக்கே இலக்கணம் வகுத்தளித்த வள்ளுவப் பெருந்தகை,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறு பகையும்
சேரா தியல்வது நாடு"

என்றார் வள்ளுவர். எவை எவை கூடாதென்றுரைத்தாரோ, அவைகளின் பிடியிலே சிக்கி நாடு இன்று சீரழிகிறது. மக்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

இந்நிலையை ஒருநாள் மறந்திருக்கச் செய்திடும் திருநாளன்று— இதுபோதும் என்ற மனநிறைவு பெற்றிட முடியாது. பெற்றிட முனைவது பேதையர் செயலாகும்.

எனவே நாடு வளம்பெற, மக்கள் நல்வாழ்வு பெற, திட்டமிட்டுப் பணியாற்றிடும் ஓர் நல்லரசு தேவை என்ற உணர்வும், அதனை வேறு யாரோ ஆக்கி நமக்கு அளித்திடுவர் என்று எண்ணிக்கொள்ளாமல், அதனை ஆக்கிடும் கடமை நம்முடையது என்ற பொறுப்புணர்ச்சியும், முயன்றால் முடியும் என்ற நம்பிக்கையும், அதற்கேற்ற செயலார்வமும், கூடிப் பணியாற்றும் திட்டமும், ஒவ்வொருவரும் பெற்றிட விழாநாள் பயன்பட வேண்டும்.

அக்ரமம் அழிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட்டு, வளம் பெருக்கப்பட்டு, வன்கணாளர் கொட்டம் அடக்கப்பட்டு எல்லோரும் இன்புற்று இருந்திடும் நெறி கடைப்பிடிக்கப்பட்டு, மக்களின் பொதுநலன் பாதுகாக்கப்பட வேண்டும்; அந்தப் புனிதப் பணியிலே நமது பங்கினைச் செலுத்தவே, நமது அறிவாற்றல், வசதி, வாய்ப்பு பயன்படவேண்டும் என்ற உறுதியினை விழா நாளன்று பெற்றிட வேண்டும்.

தூயவனின் உடலிலிருந்து ஒரு சொட்டு ரத்தம் சிந்திடின்; ஒரு கோடி மக்களின் கண்களிலே நீர் கொட்டுகிறது. காரணம்? நமக்காக, நாட்டுக்காக, நல்லதற்காக வாழ்பவர் வாழ்ந்திட வேண்டும் என்ற உணர்வு.

இன்று கண்ணீர் சிந்திடும் உழைப்பாளியைக் கண்டும் பன்னீரில் குளித்து மகிழ்ந்திடும் ஒரு சிலர் இருந்திடக் காண்கிறோம்.

அக்ரமம் ஆர்ப்பரிக்கிறது; அதனை இசையாகக் கொண்டிடுக என்று ஆணவ அரசு கட்டளையிடுகிறது. சுயநலம் கொக்கரிக்கிறது. அதனை காட்டி "வலுவுள்ளோன் வாழ்வான் என்ற வறட்டுப் பேச்சு பேசுகின்றனர் சிலர்.

இல்லை! இல்லை! அக்ரமம் அழிந்து படத்தான் வேண்டும்! என்று முழக்கம் எழுப்பிட முன் வந்தது ஒரு சிறு படை' அது நாளாக நாளாக வளர்ந்தது, வளர்ந்தது, வளர்ந்து கொண்டே இருக்கிறது! அந்தப் படையின் துணைகொண்டு, அநீதியை அழித்து நல்லரசு காண முடியும் என்ற நம்பிக்கையை நாடு பெற்றுள்ளது. நல் வாழ்த்துக் கூறி வரவேற்கின்றது.

கதிரவன் உதிப்பான் காரிருள் கலையும் என்று நாடு கூறுகிறது, நம்பிக்கையுடன்.


அந்த நம்பிக்கையை எழச் செய்த பெருமை, நமது கழகத்திற்கு உண்டு!

இன்றைய விழாநாள் நாம் நமக்காக அல்ல; நாட்டுக்காக— என்ற உணர்வு மேலோங்க வேண்டும். தூய்மை செம்மைப்பட வேண்டும். இந்த என் விருப்பத்தை உமக்கு வழங்குவதில் மகிழ்கின்றேன்.

உதயசூரியன் எழுகிறது, நல்லரசு அமைகிறது


என்ற பண் எங்கும் எழுந்து இனிமை தருகிறது. அந்தப் பண்பாடிடும் தோழர்கள், ஆண்டுக்கு ஒரு நாள் திருநாள் என்று மட்டும் இன்று உள்ள நிலையை மாற்றி வாழ்வு ஒரு திருநாள் என்ற நிலை அமைந்திடப் பாடுபடுவர் என்ற எண்ணம் தேனாக இனிக்கிறது. மலராக மணம் தருகிறது, மகிழ்கின்றேன், வாழ்த்துகின்றேன்.





# எழுந்தாள் தைமகள்

எரிந்தது கிழைவான்!
தைமகள் வெறியாடி
எழுந்து வந்தாள்...
சொரிந்தது திசையெட்டும்
சிங்களர் உடல்செந்நீர்!
சுடுகாடெல்லாம்
தெரிந்தது பகைவரின்
பிணக்குன்றம்! தெறித்தது
கொடியர் ஆட்சி!
பிரிந்தது தமிழ்ஈழப்
பொன்னுடு! பிறந்தது
புதிய வாழ்வே!
பதறின இலங்கையின்
வெறிப்படைப் பன்றிகள்
தமிழ்ஈழத்தில்
கதறின குண்டுகள்
புலிகளின் கனலெழும்
கணைகள் பட்டுச்
சிதறின வானெல்லாம்
போர்விமானங்களின்
சிறகும் வாலும்!
உதறின சிங்களர்
மேனிகள்! உயிர்த்தது
புதிய வாழ்வே!
அடித்தது கொடும்புயல்!
அறுந்தது அநீதியின்
தடித்த கீழ்வேர்!
வெடித்தது முழவுகள்!
வென்றது தமிழனின்
விடுதலைப்போர்!
படித்தது சிங்களம்
புதுப்பாடம்! பறந்தது
கொடிகள் வானில்!
வடித்தது புலவன் கை
காவியம்! வந்தது
புதிய வாழ்வே!



— காசி ஆனந்தன்


ரசிகப் பெருமக்கள் அனைவருக்கும்
எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்

**தியேட்டர் கவிதா**

121 - 122, நேரு வீதி,
ராம்நகர், கோவை - 9
போன் : 32915

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள்
பொங்கல் வாழ்த்துக்கள்

**S. தியாகராஜன் ஜுவல்லர்ஸ்**

தங்க, வெள்ளி ஆபரணங்கள்
தயாரிப்பாளர்கள்
மொத்த சில்லரை வியாபாரம்
1071, பெரியகடைவீதி, கோவை - 1,


**S.T.R. காட்டேஜ் இண்டஸ்டிரீஸ்**

தங்கம், வெள்ளி நகை தயாரிப்புகளுக்கான
எல்லா உபகரணங்களும் செய்து
கொடுக்கப்படும்.
1032, பெரிய கடை வீதி, கோவை - 1
உரிமையாளர் : S. தியாகராஜன்

பொங்கல் வாழ்த்துக்கள்!

NUTEX **நியுடெக்ஸ்**

மானோ பிளாக் செட்டுகள்
மோட்டார்கள் & பம்புசெட்டுகள்



"நியுடெக்ஸ்" மானோபிளாக் செட்
விவசாயத்திற்கென பிரத்தியேகமாகத்
தயாரிக்கப்படுபவை.
-:::தயாரிப்பாளர்கள்:::-
ஸ்ரீபாலாஜி என்ஜினியரிங் கம்பெனி
245, தடாகம் ரோடு,
G. C. T. போஸ்ட்
கோயமுத்தூர்: 641 013
போன் : 36563

வாடிக்கையாளர்களுக்கும் ரசிகப் பெருமக்களுக்கும்
எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்!

**S. M. R. டைல் ஒர்க்ஸ்**

ஒலவக்கோடு (கேரளா)

**கற்பகம் தியேட்டர்**

பிரைவேட் லிமிடேட்

**கங்கா, யமுனா, காவேரி**

தியேட்டர்கள் - கோவை

**கொடக்கல் டைல்ஸ் கம்பெனி**

திரூர், கேரளா.



# சுயாட்சிப் பொங்கல்!

## என்.வி.என். சோமு எம்.பி

இந்தியத் துணைக் கண்டத்தின் புகழ் பெற்ற வழக்கறிஞர் பல்கிவாலா கூறினர்:-

"மத்திய அரசு தங்களை அடிமைப்படுத்துவதை எதிர்த்து எல்லா மாநிலங்களும் கிளர்ந்தெழுந்து, அரசியல் சட்டத்தில் தங்களுக்கு வரையறுக்கப் பட்டுள்ள உரிமைகளை நிர்ணயித்துக் கொள்ளும் ஒரு நாள் நிச்சயம் வரத்தான் போகிறது,, என்று வலியுறுத்திக் கூறினர்!

சென்ற கிழமை ஆந்திரத் தலைநகர் ஐதராபாத்தில் நடைபெற்ற மாநில எதிர்கட்சிகளின் மாநாடு இதற்குஒருசிறந்த எடுத்துக்காட்டு!

மத்தியில் ஆள்கின்ற காங்கிரஸ் கட்சி, மாநிலங்களில் அமையும்—எதிர்கட்சி அரசுகளைத் தாங்கிக் கொள்ளும் ஜனநாயக உள்ளம் பெற்றதாக இல்லை!

ஐதராபாத்நகரில் கூடிய எதிர்கட்சிகள் இதையும் கருத்தில் கொள்ளத் தவறவில்லை!

தற்செயலாகவோ அல்லது ஒரு விபத்தின் காரணமாகவோ-மத்திய அரசில் அதிகாரத்துக்கு வந்து விடுபவர்கள்-மாநிலத்தில் அவர்கள் எத்தகைய செல்வாக்கு பெற்ற தலைவர்களாக இருந்தாலும் அவர்களை "தேச விரோத சக்திகள்" என்று தூக்கி எறிந்து பேசும் இறுமாப்பை பெற்றுவிடுகிறார்கள்!

மத்திய அரசாக இருந்தாலும் மாநில அரசின் தலைவர்களாக் இருந்தாலும் இரண்டு பேருமே மக்களால்தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் தான் என்பதையும் — இரண்டு பேருக்குமே அரசியல் சட்டம் தான் உரிய அதிகாரத்தை வழங்கி இருக்கிறது என்பதையும் — மறந்து விடுகிறார்கள்!

"மத்திய அரசும்-மாநில அரசும் அரசியல் சட்டத்தால் உருவாக்கப் பட்டவை! இரண்டுமே தங்கள் உரிமைகளை அரசியல் சட்டத்தில் இருந்து பெறுகின்றன! தங்களுக்கென வரையறுக்கப்பட்ட துறைகளில் ஒன்றுக்கொன்று கீழ்ப்படிந்ததல்ல."

— அரசியல் சட்டம் வகுக்கப்படும் போதுசட்ட நிபுணர் அம்பேத்கார் இவ்வாறு தெளிவாகக் கூறியுள்ளார்!

இவ்விதம் அன்றைய தலைவர்கள், அரசியல் நிர்ணய சபையில் அவ்வப் போதுகூறியஉறுதிமொழிகளின் அடிப்படையில் தான் — "இந்தியா கூட்டாட்சி" என்று சட்டம் இயற்ற வேண்டும் என்ற ஆவல் பலருக்கு இருந்தாலும், அந்த எண்ணத்தை விட்டுக் கொடுத்தனர்!

இன்னும் சொல்லப் போனால் பி.என். ராவ் என்ற சட்ட நிபுணர் தன்னுடைய வரைவுசட்ட வடிவத்தில்(DRAFT CONSTITUTION)

"இந்தியா கூட்டாட்சியாகத்தான் இருக்கவேண்டும்"

(INDIA SHALL BE A FEDERATION) என்று தான் எழுதினர்!

பண்டிதர்நேரு போன்ற தலைவர்கள், தங்கள் செல்வாக்கினல் - ஒப்புக்கொள்ளக்கூடிய வரதத்தினல் அல்ல — கூட்டாட்சி தத்துவத்தைப்பின்னணிக்குத தள்ளி விட்டனர்!

நேரு பண்டிதர் போன்ற புகழ் மிக்க தலைவர்கள் உண்மையான ஜனநாயகத்தில்நம்பிக்கை வைத்திருந்தனர்! "வேற்றுமையில் ஒற்றுமை" (UN TY IN DIVERSITY)" என்றார் பண்டிதர் நேரு!

ஆனல் அவருக்கு பின்னல் வந்த அவரது பரம்பரையினரோ "Unity" என்பதை ("Uniformity") 'ஒரு சீர்மை" என்று திணிக்க முயற்சிக்கின்றனர்!

தொலைக்காட்சியில் மத்திய அரசின் ஆதிக்கம் இதற்கு எடுத்துக்காட்டு!

ஐதராபாத் கருத்தரங்கில் கலந்து கொண்ட கர்நாடக முதல்வர் ராமகிருஷ்ணஹெக்டே அவர்கள்கூட அந்தந்த மாநில அரசுகட்கு-அந்தந்த மாநிலப் பகுதிகளில் தொலைக்காட்சி,வானெலியில்உரிய உரிமை வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்!

தொலைக் காட்சியிலும், வானெலியிலும் அந்தந்த மாநிலங்களுக்கு என்று தனிபிரிவு இருந்தால்தான் அந்தந்த மாநிலங்களின் நிலையை பிரதிபலிக்க முடியும் என்று கருத்து தெரிவித்தார்!

அதே கருத்தைத்தான் பஞ்சாப்முதல்வர்பர்னலா அவர்களும் வெளிப்படுத்தினர். பஞ்சாப் உரிமைக் கிளர்ச்சியின் போது, அகாலிதளத்தினரை,"பிரிவினை வாதிகள்" என்று தொலைக்காட்சியிலும், வானெலியிலும் அவதூறு பொழிந்ததாக அவர் மனம் நொந்து கூறினர்.!

மத்திய அரசில் இருப்பவர்களுக்குத்தான் நாட்டுப்பற்று இருப்பதைப் போலவும் — மற்றவர்கள், எல்லாம்தேசவிரோதசக்திகள் என்றும் — அதிலும் இந்தியத் துணைக் கண்ட அரசியல் வானில் கடந்த 3 ஆண்டுகளாக உலவி வரும் ராஜீவ்காந்தி கூறுவது முறையல்ல!

இத்தாலியப் பெண்ணை அவர் திருமணம் புரிந்து கொண்டதும்—அந்த அம்மையார் திருமணம் ஆகி 13 ஆண்டுகள் கழித்து-இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் — இந்தியக் குடிமகளாக வருவதற்கு விண்ணப்பித்தார்என்றல் —ராஜீவ் காந்தி மற்ற பழம் பெரும் தலைவர்களை தேச விரோத சக்திகள் என்று தூற்றுவது மிகவும் கேவலம்!

ஆனல் இந்திய துணைக் கண்டத்தின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு தான் அறிஞர் அண்ணா அவர்கள் சீனப்படையெடுப்பின்போது- 'திராவிட நாடு' கோரிக்கையை ஒத்தி வைத்தார்!

இந்திய ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு தான் தலைவர் கலைஞர் அவர்கள் பங்களாதேஷ யுத்தத்தின் போது — இந்திராகாந்தியை வரவழைத்து 6 கோடி ரூபாய் கொடுத்தார்'

இந்தியத்துணைக்கண்டம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் — மாநிலங்களும் சுய உரிமைபெற்று இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான்—1969ல் மத்திய மாநில உறவுகள் குறித்து ஆராய ராஜமன்னர் குழுவை நியமித்தார்!

தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றுக்

தொடர்ச்சி 13-ம் பக்கம்)


தமிழர் திருநாளாம் பொன்னன நன்னாளாம் பொங்கல் புதுநாளில் பொலிவும் வலிவும் பெற்று தமிழ்ப்பெருங்குடி மக்கள் அனைவரும் வாழ்வாங்கு வாழ இனிதே வாழ்த்துகிறோம்!

**S. N. M. சாந்தி ஸ்டோர்,**

**ரயிலடி,**

**தஞ்சாவூர்.**

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இதயங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள் !

**பரணி இஞ்சினியரிங்**
**இன்டஸ்ட்ரீஸ்,**

(எவர்சில்வர் பாத்திரங்கள், அலுமினியம் ஷீட்டுகள், பிற தொழிலக உபகரணங்கள் தயாரிப்பாளர்கள்)

26/304, ராஜா தெரு,
கோயம்புத்தூர் - 1

தொழிற்சாலை :
C-26 பிரைவேட் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
கோயம்புத்தூர் - 641 021
தந்தி : METALHOUSE

தொலைபேசி: அலுவலகம்: 32823
இல்லம் : 33317
தொழிற்சாலை: 86-342



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

எலெக்ட்ரோ பிளேட்டிங் பணிக்கு
கோவையில் புகழ் பெற்ற ஸ்தாபனம்!

போன் : 34954

**முருகதாஸ் எலெக்ட்ரோ பிளேட்டிங் ஒர்க்ஸ்**
137 படேல் ரோடு, கோவை-641009

பிரைட் நிக்கல், பிரைட் குரோமியம் — ஹார்டு குரோமியம் திறமையான நவீன முறையில் எல்லாவிதமான எலக்ட்ரோ பிளேட்டிங்-வேலைகள் குறித்த காலத்தில் நீண்டகால உத்திரவாதத்துடன் சிறந்த முறையில் செய்து கொடுக்கும் சிறப்பான ஸ்தாபனம்.

உரிமையாளர்: கே. எம். ராம்தாஸ்



எமது உளங்கனிந்த பொங்கல்
நல்வாழ்த்துக்கள்!

**மெட்டல் டிரேடிங்**
**கார்ப்பரேஷன்**

மெட்டல் மெர்ச்செண்ட்
15 - 377, என். எச். ரோடு,
கோவை — 1
தொலைபேசி எண் : 22769

உரிமையாளர்:
எம். மணி & பிரதர்ஸ்



கழக உடன்பிறப்புகளுக்கும்
கழக முன்னணியினருக்கும் அன்பு கலந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

**மக்கள் போற்றும் தலைவர்**
**கலைஞர் வழிநடப்போம்!**

**தி. மு. கழகம்**

சூலூர், பேரூர் கிளை,
கோவை மாவட்டம்.



BEST COMPLIMENTS FROM

**Dee Vee**
**Engineering**

171, 9th Extesnion,
100 Feet Road,
Gandhi Puram
COIMBATORE - 641012



ரசிகப் பெருமக்களுக்கு எமது இதயங்கனிந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தரமான திரைப்படங்களை வழங்கி வரும்
குளுகுளுவசதியுடன் கூடிய சிறந்த திரையரங்குகள்!

**சென்ட்ரல் 70mm**
**கனகதாரா PANA VISION**
**V. R. காம்ப்ளக்ஸ்**

மேட்டுப்பாளையம் ரோடு,
தபால் பெட்டி எண் : 1001
கோயம்புத்தூர் - 641002
தொலைபேசி - 822544

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட கலைஞர் அவர்கள்-முதன் முறையாக 1969 மார்ச் 17ம் தேதி டெல்லி சென்ற போது, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் இருந்து வந்திருந்த 50க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் மத்திய - மாநில உறவு குறித்து கேள்விகள்கேட்ட போது - தி.மு.க. அரசு, வெகுவிரைவில் மத்திய-மாநில உறவுகளை ஆராய ஒரு குழு அமைக்கும் என்று கூறினர்.

அதன் அடிப்படையில் இந்தியாவிலேயே முதன் முதலாக கலைஞரால் அமைக்கப்பட்ட குழு - ராஜமன்னர்குழு!

அந்தக் குழுவின் அடிப்படையில்-மத்திய - மாநில உறவுகள் குறித்து இந்தியாவிலேயே முதன் முதல் தீர்மானம் நிறைவேற்றிய சட்டமன்றம்— தமிழ்நாடு சட்ட மன்றம்! தி. மு. க. அரசு துணைக் கண்டத்திற்கே வழி காட்டியது!

அப்போது சிலர் கேலி பேசினர்! சிலர் தேவையா என்றனர்!

ஆனல் காலத்தின் கட்டாயம்' ராஜமன்னர் குழுவைத் தொடர்ந்து—சர்க்காரியா குழுவை அமைக்க —பிரதமர் இந்திராகாந்தியை வற்புறுத்தியது!

"மாநிலத்தில் சுயாட்சி மத்தியில்கூட்டாட்சி" என்ற தத்துவம் அறிஞர் அண்ணு அவர்களால் உருவாக்கப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்களால் வளர்க்கப்பட்டுவரும் அந்த இலட்சியம்-இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரவிவிட்டது!

அதனுடைய எதிரொலி தான் ஐதாராபாத் நகரில் ஒலித்த இலட்சிய முழக்கங்கள்!

அசாம் தேர்தலில் அண்மையில் வெற்றி வாகை சூடிய அசாம் கணபரிஷத் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் கோசாமி "இந்தியா ஒரு கூட்டாட்சி நாடு தான் என்று வலியுறுத்திப் பேசினுர் என்றுல் — இன்றைக்கு இந்திய அரசியல் அரங்கில் "ஒற்றையாட்சி முறைக்கு" ஏற்பட்டு வரும் எதிர்ப்பு நன்ருகப் புரியும்!

அந்த எதிர்ப்பை இலட்சிய ரீதியாக சந்திக்க முடியாதவர்கள் தான். நாட்டுத்தலைவர்களை தேச விரோத சக்திகள் என்று விமர்சிக்கிருர்கள்!

ஐதராபாத் கருத்தரங்கில் நானும்—கழக வெளியீட்டுச் செயலாளர் சி. டி. தண்டபாணி அவர்களும்பங்குபெறும்வாய்ப்பு கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினுர்கள்!

தி. மு. கழகத்தின் சார்பாக கலைஞரின் குரல் அங்கேவலியுறுத்திக் கூறப்பட்டது!

"ஒவ்வொரு மாநிலத்திற்கும் நியாயம் வழங்கப்படுமாகில் - தன்மான அந்தஸ்து வழங்கப்படுமாகில் வட்டாரபிரச்சினைகள் சிக்கலாகும்வாய்ப்பேஇராது! அனைத்திந்திய அரசியலில் மாநில கட்சிகள் முக்கிய பங்கு வகிப்பது புதிதல்ல! 1969 - இல் இருந்து 1971 வரையிலான கால கட்டத்தில் இந்திராகாந்தி அம்மையார் சிறுபான்மை அரசாங்கத்தை (பெரும்பானமை ஆதரவின்றி) நடத்தி வந்த போது, மக்கள் அவையில் 25 உறுப்பினர்களைக் கொண்டிருந்த தி.மு. கழகம் அவரை ஆதரித்து வந்தது. இ.காங்கிரஸ் அல்லாத மாநிலகட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அனைத்திந்திய அளவிலும் நாடாளுமன்றத்திலும்ஒரு கூட்டமைப்பாக செயல்படும் சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொல்லி விட முடியாது! அது கைகூடுமாகில் அந்த நன்னுளே இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்தின் பொன்னுளாக விளங்கும்!

— கலைஞரின் குரல் — கழகத்தின் குரல்— ஐதராபாத்தில் எதிரொலித்தது! அந்த இலட்சிய முழக்கம் — இந்திய துணைக் கண்டம் முழுவதும் எதிரொலிக்கட்டும்!

அந்த நல்லுணர்வை — இந்த ஆண்டுப் பொங்கல் திருநாள் நமக்கெல்லாம் வழங்கி — வெகுவிரைவில் தமிழகம் சுயாட்சிப் பொங்கல் கொண்டாட வழி காட்டட்டும்!

## இந்தியை நுழையவிட்டு ஏமாறுவதா?

தமிழ் வாழ வேண்டுமானல் — தமிழகம் தலைநிமிர வேண்டுமானல் — தண்டமிழின் பண்டைச் சிறப்பு தழைக்க வேண்டுமானல்—பிற நாடுகளுடன் 14 மொழிகளும் ஆட்சிமொழி ஆகும்வரை தொடர்பு கொள்ள வேண்டுமானல் — 'ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்றுதான்-- தமிழ் நாட்டின் கடைசித் தமிழன் இருப்பானே தவிர, தமிழைக் காட்டிக்கொடுத்து இந்தி நுழைய ஏமாந்து விடமாட்டான்!

கலைஞர்


வாடிக்கையாளர்களுக்கும் ரசிகப் பெருமக்களுக்கும் எங்கள்

**உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!!!**

திரையிடத் தயார் எங்களது அடுத்தவெளியீடுகள்

விதவிதமானது தற்போது நடைபெறுவது

**THE CONCRETE JUNGLE**

கலர் (ஆங்கிலம்)

**FINAL MISSON (A)**

கலர் (ஆங்கிலம்)

**NINJA (A)**

கலர் (ஆங்கிலம்)

**BODY ROCK**

கலர் (ஆங்கிலம்)


**சிடி - தமிழ்நாடு மற்றும் கேரளா முழுவதும்**

ஏரியா உரிமைக்கு K. R. பிலிம்ஸ்

கோபாலபுரம், கோவை-18 போன்: 33298

**பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**





1965 ல் இந்தி எதிர்ப்புப் போரின் போது காஞ்சியிலிருந்து வந்த அண்ணாவை பூந்தமல்லிக்கருகில் போலீஸ் வழிமறித்துக் கைது செய்து அழைத்துச் சென்ற காட்சி!

"தமிழ்ப் பண்பாடு, உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும். ஆனால் தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள்.

இங்கிலாந்திலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ் மொழி அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில் அந்த மொழிக்குச் சொந்தக்காரர் நாம் என்று நினைக்கும் போது அந்த மொழி மீது நமக்கு பற்று-பாசம் ஏற்படாமலா இருக்கும்? அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது எந்த நோக்குடனாவது எப்படிப் பட்டவர்களிடமிருந்தாயினும் தனி 'மரியாதை கிடைக்கவில்லையென்றால் அதை தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டு தான் இருக்கிறது பக்குவமாகக் கடக்க வேண்டுமானால் நல்ல நாவாயின்—கப்பலின் மூலம் கடக்கலாம். அதுபோல தமிழர்களை அணைத்துக் கொண்டு சென்றால் அவர்களைவிட சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது."

**மரியாதை இல்லையென்றால் தமிழகம் பொறுக்காது**
—அண்ணா


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

# ஹோட்டல் ரெக்ஸ்

மேட்டுப்பாளையம் ரோடு,
கோயம்புத்தூர் - 641 002

(சுவைமிக்க சைனீஸ், தந்தூரி மற்றும் வட இந்திய உணவு வகைகளை அறிமுகப் படுத்துகிறோம்.)

சேவையே எங்கள் குறிக்கோள்!



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

# ஸ்ரீ வெங்கடேஸ்வரா கார்ப்பரேஷன்

9 60 ஆர். ஆர். சுவாமி சந்து
கோயம்புத்தூர் - 641009

தொலைபேசி - 32746

(தரமிக்க SVC. மேக் சிங்கிள் பேஸ் 3 பேஸ் மோட்டார் பம்புகள் மற்றும் மானோ பிளாக்குகள் தயாரிப்பாளர்கள்)

உரிமையாளர்:
வி. ஜி. சுப்பிரமணியம்




உளங்கனிந்த பொங்கல் நல்வாழ்த்துகள்!

TEXMO

# டெக்ஸ்மோ

மோட்டார் - பம்பு செட்டுகள்




மற்றும் எல்லாவிதமான மின்சார சாதனங்கள் கிடைக்குமிடம்

# செல்வம் ஏஜன்ஸிஸ்

23, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயமுத்தூர்- 641 018
போன்: 26878



வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

# நாஸ் தியேட்டர்,

N. H. ரோடு, கோவை-1
தொலைபேசி: 33 334

P. சுப்ரமணியம்

# ஸ்ரீ கணேஷ் ஜுவல்லர்ஸ்,

325, பெரிய கடைவீதி,
கோயம்புத்தூர்,

தொலைபேசி: 30461, 35352 (இல்லம்)

kindly Contact for all your requirements

Grams : "Vigilance"

Phone :
office 23718
27338
Res- 24793
Godown- 34079

**C.R.S. Mannadiar & Bro.,**

(Established 1942)

*N. H. Road, Coimbatore - 641001*


**Dealers in,**

*M. S. Rounds Tor steel, Rods Flats Angles, Channels, Beams, M. S. Plates M. S. Sheets C.R. Sheets, G.I. Plates, Corrugated Sheets Hard boards, Aluminium Sheet and fittings, Tarpaulins Welded mesh, Wire mesh, Fencing & Barbed Wire, G. I. Chainlinks and all other building accessories both whole sale & retail.*

"Customers satisfaction is our motto"

# என்ன பொங்கல்?

-கவியரசர் பொன்னிவளவன்



அரிசியெல்லாம் தமிழ்ஈழக் குழந்தை யின்பல்;
அதுகொதிக்கும் உலைநீரோ தமிழர் அங்கே
சொரிகின்ற செங்குருதி; அடுப்பில் தோன்றும்
சுடர்நெருப்போ திரிகோண மலையைச் சுற்றி
எரிந்திட்ட பெருநெருப்பை நினைக்க வைக்கும்!
எம்முடைய கன்னமெலலாம் கண்ணீர்க் கோலம்!
கரிக்கிறதே— கசக்கிறதே கட்டி வெல்லம்!
கசக்கிறதே செங்கரும்பும்! என்ன பொங்கல்?

கறுப்பண்ணன் போன்றோரைப் பறிகொ டுத்துக்
கலங்குகின்ற ஆசிரியர் கூட்டம், நெஞ்சு
வெறுப்பின்னும் மாறாமல் துள்ளும் மீனை
விடத்துள்ளும் மீனவர்கள்; தமக்கி ருக்கும்
பொறுப்பென்ன? புரியாத ஆட்சி யாளர்;
புரிந்திருந்தும் புரியாதார் போல்ஏ த்றகும்
மறுப்பின்றி ஏற்கின்ற 'நாட்டு' மக்கள்
மத்தியிலே நமக்கெல்லாம் என்ன பொங்கல்?

புத்தாடை உடுத்துதற்கும் பிடிக்கவில்லை;
பொங்குகையில் பொங்கலோ பொங்கல் என்று
சத்தமிடப் பிடிக்கவில்லை; திருந்தி டாத
சமுதாயம் இதையும்தான் பிடிக்க வில்லை;
எத்தனையோ 'போர்உயிரைப் பறிகொ டுத்தும்'
எவ்வளவோ துயர்ப்பட்டும் உதைகள் பட்டும்
புத்தியின்னும் வரவில்லை மக்களுக்கு!
பொங்கல் இதோ வருகிறதாம்! என்ன பொங்க

With the best compliments from

★

**M/S MAHENDRA ENGINEERING WORKS**

*COIMBATORE - 641045*

Mfrs of Motors, Pumps,
Mono Blocks and Jet Pumps

WITH BEST COMPLIMENTS FROM

★

*Estd: 1952* *Phone: Off 24222*
*Res- 25897*

**M/s E. PURUSHOTHAM**
and
**P. ETHIRAJ & Co.,**

(Hardware, Paints & Cement Merchants)
14, Mill Road,
COIMBATORE - 641001

எமது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

**SUPER FLOW**

*Manufactures of super jet pumps, Electric Motors, Monoblocks andspecial pumps*

*5-241, THADAGAM ROAD,*
*G. C. T. POST,*
*COIMBATORE - 641013*
**PHONE - 36495**


ரசிகப் பெருமக்கள் அனைவருக்கும்
எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்!

தந்தி: பிக்சர் போன் : 23703

**ஆனந்தா பிலிம்ஸ்**

8/7 கோபாலபுரம்
கோயமுத்தூர்—18

உரிமையாளர்:
N. A. ரசீத்,
வீடு போன்: 26985



# பொங்கல் சபதம்!

## தலைவர் கலைஞர்



உடன்பிறப்பே,

வானவெளியின் வட்ட நிலாப் பேடையும், அதன் முட்டைகளாம் நட்சத்திரங்களும் அந்தகார இருட்டில் கருமேகங்களின் கூட்டமெனும் கூடையிட்டுக் கவிழ்க்கப்பட்டிருக்கும் வேளையில் ஒரு மின்னல் கீற்று பளிச்சிடும் ஒளியைக் காணும் போதும்—

கொந்தளித்துக் குமுறி வான் நோக்கி அலைக் கரங்களை நீட்டும் கடலின் சீற்றத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் நங்கூரத்தையும் பெயர்த்துக் கொண்டு கப்பல்கள் கவிழ்ந்து கொண்டிருக்கும் கோரக் காட்சிக்கிடையே ஒரு கணவன், மனைவி, அவர்கள் பெற்றெடுத்த இளந்தளிர் மூவரையும் சுமந்து கொண்டு ஒரே ஒரு கட்டுமரம் கரையோரம் நோக்கி வருகின்ற காட்சியைப் பார்க்கும் போதும் —

மரங்களையெல்லாம் வேரோடு பெயர்த்து மலைப் பாறைகளைக்கூட உருட்டித் தள்ளிக் கொண்டிருக்கும் புயல் காற்றுக்கிடையிலே, ஒரே ஒரு குடிசையில் ஒரு சிறுமி; அகல் விளக்கொன்றை ஒரு கையில் பிடித்து இன்னொரு கையால் அதனை அணையாமல் பாதுகாத்துக் கொண்டிருப்பதை உற்று நோக்கும் போதும் —

ஒரு துளி மகிழ்ச்சி நம்மை எப்படியும் ஆட்கொண்டே தீருமல்லவா; அதே போலத்தான், அருகே — மிக அருகே — மிகமிக அருகே—நமது தமிழினம், இலங்கைத் தீவில் நாள்தோறும் வதைபடும் இந்தச் சூழலில் "பொங்கல் நாள்" நமது உதடுகளை உடைத்துப் புன்னகையை வெளிக் கொணர முயற்சிக்கிறது!

கரும்பு தின்று மகிழ்கிறார்கள் குழந்தைச் செல்வங்கள்!

அவர்களின் இதழோரம் அந்தச் சாறு வழிகிறது! கருப்பஞ்சாறு எப்படிச் சுவை தரக் கூடியது என்பதை உணர்ந்த போதிலும், அந்தச் செல்வங்கள் அந்த இனிய சாறு விழுங்கி பெற்றிடும் சுவையின் இனிமையை நினைத்து என்னால் இன்புற முடியவில்லை! மாறாக அந்த மழலையமுதங்களின் இதழ்களில் கரும்பு கடிப்பதால் மெல்லக் கசிகிற ரத்தத்துளிகளே என் கண்களுக்கு முன்னால் பேருருக் கொண்டு - குருதி அருவியாகக் கொட்டி; அம்மவோ - இவ்வாறன்றோ ஈழத்தில் என் இனத்தினர் செந்நீர் வடிக்கின்றனர் எனும் நினைவுவாள் கொண்டு என நெஞ்சம் வெட்டப்படுவது போல் இருக்கிறது!

மங்கலமங்கையர் எழிலார் முகத்தில் மஞ்சள் பூசி, பொட்டிட்டு, பூ முடித்துப் "பொங்கலோ பொங்கல்" என உலையிருக்கும் புதுப்பானையருகே நின்று வாழ்த்தொலிக்கும் போது - என் அகக்கண் முன்னால் இலங்கைத் தமிழச்சிகள் பலரின் மஞ்சள் அழிக்கப்படுவதும், பொட்டு அகற்றப்படுவதும், பூங்கொத்து கசக்கி எறியப்படுவதுமான காட்சியன்றோ என்னைக் கண் கலங்க வைக்கிறது!

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ"

எனும் குறுந்தொகை வரிகளைப் படிக்கிறேன்! முறுகக் காய்ந்த கட்டித்தயிரைத் தனது காந்தள் விரல்களால் பிசைந்து, இதயங்கவர்ந்த கணவனுக்கு உணவு பரிமாற முற்படும்போது நழுவிடும் மேலாடையை, தயிர் பிசைந்த கையைக் கழுவாமலே சரி செய்து கொண்டு நாணமுறுகிறாள் தமிழச்சியொருத்தி என விளக்கி, தமிழ்க்குல மங்கையின் பண்பாட்டுப் பெருமையை இலக்கியப்புலவர்கள் சுட்டிக்காட்டுவது கண்டு வியக்கின்றேன் எனினும், கற்புக்கு அத்துணைச் சிறப்பு தரும் இந்தத் தமிழ்க் குலத்து மங்கையரின் மானந்தானே இலங்கைத் தீவில் அவர்கள் கணவர்களுக்கு நேராகவே பறிக்கப்படுகிறது எனப் பெருமூச்சு விடுகிறேன்!

எனவேதான் கருமேகம் சூழ் காரிருளில் மின்னல் கீற்றின் ஒளி!

கப்பல்களைக் கவிழ்க்கும் கொடும் புயலில் தப்பி வரும் கட்டுமரமொன்றைக் காணும் உணர்வு!

சுழன்றடிக்கும் சூறாவளிக்கிடையே சிறுமியின் கையில் அணையாமல் இருக்கும் அகல்விளக்கு!

இவை ஏற்படுத்தக்கூடிய எள் முனையளவு இன்பத்தைமட்டுமே பொங்கல் நாள் எனக்கு வழங்குகிறது! ஏன்; உனக்கும் அப்படித்தான்!

பொங்கல் அடுப்பில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் அந்தத் தீ; நமது நெஞ்சத்திலிருந்து கிளம்பட்டும்! அந்த நெருப்பு "இலங்கைத் தமிழ் இனத்தைக் காத்திடக் கிளம்புவோம்; எதிர்வரும் இன்னல் அனைத்தையும் ஏற்போம்!"

என்ற சூளுரை வேலினைக் கூர் ஏற்றிடப் பயன்படட்டும்!

இதுவே பொங்கல் நாளில் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஏற்றிட வேண்டிய சபதமாகும்!

அன்புள்ள,

மு. க.